பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 29 செவ்வாய்க்கிழமை (12-03-1996) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 107

# வெல்லாவெளியில் புலிகளின் அதிரடியில் கொமாண்டோ அணி கூண்டோடு அழிப்பு!

## வலிகாமத்தில் நேற்று ஷெல், பீரங்கிச் சத்தம்

படையினரின் ஆக்கிரமிப்புப் பிரதேசமான வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று ஷெல் மற்றும் பீரங்கிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதற்கிடையில் வடமராட்சி கரையோரப் பகுதியில் நேற்று அதிகாலை கேட்ட விமான இரைச்சல் சத்தத்தால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. அதிகாலை 3-45 மணி அளவில் இந்த விமானம் இரைச்சலுடன் பறந்து சென்றது. (இ-15)

## வாகரையில் ஹெலி தாக்கு நால்வர் கொல்லப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் ஸ்ரீலங்கா வான்படைக்கு சொந்தமான இரு ஹெலிகள் தாக்குதல் நடத்தின. நால்வர் கொல்லப்பட்டனர். மேலும் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

க. பார்வதி (40 வயது), வே. மகேந்தினி (11 வயது), புவனேஸ்வரி (35 வயது), க. கலாவதி (12 வயது) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர். (இ-3)

## தேடி அழிக்க வந்தோரை வழிமறித்து 23 பேரையும் ஒழித்துக்கட்டினர்

சாவகச்சேரி, மார்ச் 12

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப் பகுதியில், விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய மிகப் பலமான அதிரடியில்—

ஸ்ரீலங்கா கொமாண்டோ அணி ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது.

தம்மைத் தேடி அழிக்க வந்த 23 பேர் கொண்ட அந்த அணியை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கி கூண்டோடு ஒழித்தனர்.

கொமாண்டோ அணியைப் பூண்டோடு அழித்த புலிகள் மீது தாக்குதல் நடத்த மேலதிக படை விரைந்தது.

அந்தப் படைக்கு விமானப் படை உதவியபோதிலும் புலிகள் எதிர்த்துக் கடும் சமர் புரிந்தனர்.

மேலதிக துருப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் நேற்று இரவு வரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிக்கு சென்ற படையினர் 15 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 12

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் நேற்று ஸ்ரீலங்கா இராணுவ கொமாண்டோ அணி மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்திய சமயம் உதவிக்கு வந்த படையினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்பொழுது 14 அல்லது 15 படையினர் காயமடைந்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது. (இ—6)

## 14 பேர் படையினரால் நேற்று விடுவிக்கப்பட்டனர்

வடமராட்சி, மார்ச் 12

பலாலி இராணுவ முகாமில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களில் 14 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் நேற்று முற்பகல் ஹபரண கப்பலில் அழைத்து வரப்பட்டனர்.

வீடுபார்க்கச் சென்றபோதும், கடலில் வைத்தும் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களே இந்த 14 பேரும் ஆவர்.

இவர்கள் அனைவரும் பருத்தித்துறையில் வைத்தே உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் நேற்று இயங்கின: மாணவரில் கணிசமானோர் வருகை

### வகுப்புகளில் தளபாடப் பிரச்சினை

சாவகச்சேரி, மார்ச் 12

வடமராட்சி தென்மராட்சி மற்றும் இடம்பெயர்ந்த வலிகாமம் பகுதிப் பாடசாலைகள் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தன.

இடம்பெயராத பாடசாலைகள் காலை 7-30 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரையும், இடம்பெயர்ந்த பாடசாலைகள் பிற்பகல் 12-15 மணி முதல் மாலை 4-00 மணி வரையும் இயங்கின.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் சங்கம் சென்னையில் வழக்கு

சென்னை, மார்ச் 12

தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்துவதால் —

தங்களைப் பாதுகாக்க போதிய கடற்படை மற்றும் கரையோரக் காவல் துறையினரைப் பணியில் அமர்த்துமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டுமெனக் கேட்டு —

தேசிய மீனவர் சங்கம் சென்னை உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. பரீட்சை ஏப்ரல் 2 ஆம் வாரம்

கடந்த டிசம்பர் மாதம் வடக்கில் ஒத்திவைக்கப்பட்ட ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையை அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் நடந்த அத்தியாவசிய சேவைகள் தொடர்பான மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பரீட்சை ஆணையாளருடன் பேசி இதுபற்றி இறுதிமுடிவு எடுக்கப்படவிருப்பதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை — நேற்று கொழும்பில் பரீட்சை ஆணையாளர் ஒழுங்கு செய்த மாநாட்டில் இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படவிருந்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (இ-3)

## மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில்

மந்திகை, மார்ச் 12

நேற்று படையினரால் விடுவிக்கப்பட்ட 14 பேரில் ஒருவர் மனநோய் காரணமாக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தியாகராஜா என்பவரே மனநோயால் பாதிக்கப்பட்டவர் ஆவார்.

இராணுவத்தின் பிடிக்குள் சிக்கி சில நாள்களின் பின்னர் இவர் மனநோயால் பாதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் தமது உறவினர் குறித்து சரியான தகவல் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும்—

இவரது உறவினரை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-3-15)

## மேலும் 22 பேர் பலாலியில்

பலாலி இராணுவ முகாமில் மேலும் 22 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று விடுதலையானோர் தெரிவித்தனர்.

இவர்களில் மூன்று இளைஞர்கள் உட்பட 5 பேர் அச்செழுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் முகாமுக்கு கொண்டுவரப்பட்டிருந்தனர் என்று இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத்தவிர தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய 17 பேரின் விவரம் வருமாறு.

★ பொன்னுத்துரை இராசலிங்கம், அச்செழு.

★ பூலோகம் இலங்கரட்ணம் பண்டத்தரிப்பு.

★ ஐயாத்துரை ஆனந்தரூபன், பண்டத்தரிப்பு.

★ திருநாவுக்கரசு குணசேகரம், குளமங்கால், அளவெட்டி.

★ நாகலிங்கம் சுகந்தன், குளமங்கால், அளவெட்டி.

★ இலட்சுமிகாந்தன் மதியழகன், திருகோணமலை.

★ தங்கராசா வசந்தநாதன், மயிலணி;

( 2 ஆம் பக்கம் பார்க்க )

## உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச், 12

வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த [illegible] கல்வியியல் [illegible] மாணவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாஹோவில் தேங்காய் பால் பவுடர்

சாவகச்சேரி, மார்ச் 12

நேற்று வடக்கு நோக்கி புறப்படவிருந்த 'மாஹோ' கப்பலில் 24 ஆயிரம் தேங்காய்ப்பால் பவுடர் பைக்கெட்டுக்கள் மற்றும் 20 ஆயிரம் தேங்காய்கள் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா முடித' கப்பலும் நேற்று வடக்கு நோக்கி புறப்படவிருந்தது. (இ-3)

## 6 பெண்கள் மீது படையினர் பாலியல் வன்முறை!

### மட்டக்களப்பில் சம்பவம்

சாவகச்சேரி, மார்ச் 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவ கட்டுப்பாட்டு முடிவுச் கிராமமான மயிலங்கரைச்சை என்னும் இடத்துக்கு நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு சென்ற ஸ்ரீலங்கா படையினர் அந்தக் கிராம தமிழ் மக்களை அடித்து துன்புறுத்தியதுடன் திருமணமான 6 பெண்களை மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர்.

இந்த கிராமத்தில் தாக்கப்பட்டவர்களும் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்களும் மிகவும் ஆபத்தான நிலையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

21 இழை — பச்சை நிறம்— 5 இஞ்சி, 21 இழை — பச்சை நிறம் — 7 இஞ்சி புதிய வலைகள் விற்பனைக்குண்டு. துரை, துன்னாலை வடக்கு, பிறேம் நாத் வீதி. (41006)

இறக்குமதி செய்யப்பட்ட ரெண்டு கம்பளங்கள், கென்வூட் குளிர் சாதனப்பெட்டி, வெதுப்பியுடனான மின் அடுப்பு, நாஷனல் சுழல் மின் விசிறி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீசத்ய சாயி பஜனை நிலையம், நாவலர் மடம், சிவகுமார் வீதி, கரவெட்டி. (40339)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பூங்கா ஒன்றிற்கு தேவையான நல்லின வளர்ப்பு மீன்களும், Love Birds (காதல் பறவைகள்) தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: இல. 105, மே/பா உதயன் கிளை, பருத்தித்துறை (40341)

வீட்டு அலுவல்களைக் கவனிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. தொடர்பு கொள்ளவும்: க. துரைரட்ணம், ஸ்ரீஸ்கபே, பிரதான வீதி, பருத்தித்துறை. (41014)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள தம் புறுவளைப் பிள்ளையார் கோயிலுக்கும், ஊர்த் மாதா கோவிலுக்கும் இடையே உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40340)

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து 200 யார் தூரத்தில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. (40932)

## ஹமீத்துக்கு கல்தா!

கொழும்பு, மார்ச்12

ஐ. தே. க. முகாமைக் குழுவில் இருந்து கட்சியின் முன்னாள் தவிசாளர் ஏ சீ. எஸ். ஹமீத்தை நீக்க கட்சித் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளதாக 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது.

ஹமீத்தின் இடத்துக்கு கொடித்துவக்குவை நியமிக்க தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

## இலங்கை மின்சார சபை
## ஓய்வூதியர்களின் கவனத்திற்கு

தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களது சரியான முகவரி எம்மிடம் இல்லாததால் சில ஓய்வூதியர்களது ஓய்வூதிய வவுச்சர்கள் எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. எனவே சகல இலங்கை மின்சார சபை ஓய்வூதியர்களும் தங்களது தற்போதைய முகவரியை கீழ் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு கடித மூலம் எனக்குப் பிரதியுடன் அறிவிக்கவும்.

ஓய்வூதியக் கணக்காளர்,
இலங்கை மின்சார சபை,
த. பெ. இல. 540,
கொழும்பு-2.

வே. இராசேந்திரன்
பிரதிப் பொது முகாமையாளர்,
(வடமாகாணம்)

வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர்-
அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
டச்சு வீதி, சாவகச்சேரி. (40939)

## லிங்கம் பட்டு அகம்

### மலிவு விலையில்

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| ✶ காஞ்சிபுரம் | 2400 | 1700 |
| ✶ காஞ்சிபுரம் | 1650 | 1300 |

★ மற்றும் சகல விதமான இந்தியன் சாறிகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

400/- தொடக்கம் 675/- வரை

இல: 1, நவீனசந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

(சி-2989)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி கலைச்செல்வி தியாகராசா
அவர்களின் அன்புத் தாயாரான

### திருமதி மனோன்மணி தியாகராசா

அவர்களின்

மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(40344)

அருள்மிகு

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சாவகச்சேரி

அம்பிகை அடியார்களின் கவனத்திற்கு;

அடியார்களின் வசதியை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் தினசரி நடைபெறும் பூஜை நேரமும் ஆலயத்திருக்கதவு திறந்திருக்கும் நேரமும்:-

| | | |
|---|---|---|
| தினசரி— | காலை சந்திப்பூஜை — | 8-00 மணி |
| | உச்சிக்காலம் — | 10-00 மணி |
| | சாயரட்சை (மாலை) — | 5-00 மணி |

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் உச்சிக்காலப் பூஜை 12-00 மணி. செவ்வாய் சாயரட்சை பூஜை — 3-30 மணி.

பங்குனித் திங்களை முன்னிட்டு அடியார்கள் பொங்கி வழிபட வசதியாக காலை 5-00 மணி முதல் மாலை 7-00 மணி வரை ஆலயம் திறந்திருக்கும். இத்தினங்களில் விசேஷ பூஜைகள் இடம் பெறும்.

நன்றி

இங்ஙனம்
தர்மகர்த்தா
ப. மஹாகணபதி சர்மா

(40929)

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

★ **கல்லூரிப் பாதுகாவலர் திருவிழா**
17. 03. 96 ஞாயிறு, மிருசுவில் புனித நீக்கிலாஸ் ஆலயத்தில் காலை 9.30 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

★ **க. பொ. த. உயர்தர மாணவர் (1996)**
விண்ணப்பப் பத்திரம் தொடர்பான கூட்டம் 13. 03. 96 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புனித நீக்கிலாஸ் ஆலய முன்றலில் இடம்பெறும்.

இம்மாணவர்கள் தவறாது சமுகம் தரவும்.

(41017) அதிபர்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணபதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) எழுதுவினைஞர்

(2) கணக்கு எழுதுநர்

க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்த 25 - 40 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

செயலாளர்,
புலோலி வணிகர் கழகம்,
மந்திகை,
புலோலி.

என்ற முகவரிக்கு 20 - 03 - 96 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகம்

(சி/4102)

## இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம்
## பொதுக்கூட்டம்

காலம்; 25-03-1996 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணி
இடம்: டிறிபேக் கல்லூரி மண்டபம், சாவகச்சேரி

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன அஞ்சலி
2. தலைமையுரை
3. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
4. கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
5. புதிய நிர்வாகம் தெரிவு
6. பிற விடயங்கள்
7. நன்றியுரை

கழகத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

தலைவர் செயலாளர்

குறிப்பு:
வன்னி பெரு நிலப்பரப்பில் உள்ள அங்கத்தவர்கள் 22-03-1996 ஆம் திகதிக்கு முன்னர் ராங்வியூ ஹோட்டல், இரணைமடுச் சந்தி, கிளிநொச்சியிலும், புதிய குடியிருப்பு செயலகம், சேகர் வீதி, அசோக் எழுச்சி கிராமம், முழங்காவில் ஆகிய முகவரிகளில் தொடர்புகொண்டு [illegible] ஒழுங்குகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(40941)

## மேலும் 22 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி))

★ நாகராசா ஸ்ரீசங்கர், சங்கானை.
★ பத்திநாதன் தெய்வேந்திரம், மல்லாகம்.
★ முத்துச்சாமி நவஜீவன், உடுவில்.
★ வெங்கடாசலம் செல்வம், விசுவமடு.
★ மகேசன் புராந்தகன், அச்சுவேலி.
★ சோமு கிருபாகரன், அச்சுவேலி.
★ ஆறுமுகம் செந்தில்குமார், கொல்லன்கலட்டி.
★ கார்த்திகேசு விஜயன், சுழிபுரம்.
★ பாலசிங்கம் சற்சொருபன், மூளாய்.
★ மயில்வாகனம் குணசேகரன், கொழும்புத்துறை.

(இ—173)

புலோலி புனித சூசையப்பர் ஆலய

## வருடாந்த விழா

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த விழா பங்குனித் திங்கள் 10 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19-03-96 முடிவடையும்.

தினமும் மாலை 4-30 மணிக்குத் திருச்செபமாலையுடன் திருப்பலிப் பூசையும், ஆராதனையும் நடைபெறும். 18-03-96 மாலை 5-00 மணிக்குத் திருச்செபமாலையைத் தொடர்ந்து திருச்சுருபப்பவனியும், அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும், பவனியும் இடம்பெறும். 19-03-96 காலை 7-00 மணிக்குத் திருநாள் கூட்டுப்பலியும், திருச்சுருப ஆசீரும் அருளப்படும்.

அல்லல்படுவோருக்கு ஆறுதல் அளிக்கும் பாதுகாவலரான புனித சூசையப்பரின் பாதம் சரண் அடைந்து ஆறுதல் அடைவோமாக.

பங்குத்தந்தையும்,
பங்குமக்களும்.

(41013)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற நிறுவை, அளவைப் பரிசோதகர்)

கொக்குவிலைச் சேர்ந்தவரும், கரணவாயில் தற்காலிகமாக வசித்தவருமான செல்லத்துரை சிவபாதசுந்தரம் 10-03-1996 இல் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (12-03-1996) காலை 11-00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பேராசிரியர் சி. மகேஸ்வரன்
(மகன்)

பொன்னம்பல வித்தியாலய வீதி,
கரணவாய் வடக்கு. (41016)

### கந்தசாமி திருநாவுக்கரசு

(பிராந்திய முகாமையாளர், இலங்கை வங்கித் தலைமையகம், கொழும்பு)

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியைச் சேர்ந்த கந்தசாமி திருநாவுக்கரசு கொழும்பில் 6 - 3 – 96 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி — தங்கம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், தனேஸ்வரியின் அன்புக் கணவரும், செந்தில்செல்வன், சுதாகினி, செந்தில்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10 – 3 - 96 அன்று காலை 11.30 மணிக்கு கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. தனேஸ்வரி
(மனைவி)

தற்போதைய முகவரி:
மே/பா சோ. மனோகரன்,
ஆலங்கேணி,
பூநகரி. (41015)

### சுந்தரம்பிள்ளை விசாலாட்சி

காரைநகர் களபூமி தன்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது அல்வாய் வடக்கில் வசித்தவருமான சுந்தரம்பிள்ளை விசாலாட்சி 11 - 03 - 96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பர் சுந்தரம்பிள்ளையின் மனைவியும், முருகானந்தன், சிவமலர், சிவானந்தன் ஆகியோரின் தாயாரும், அருச்சுனன், சாந்தி, மோகனாம்பிகை ஆகியோரின் மாமியாரும், சுமங்கலா, சுபத்திரா, குருநந்தன், தனுஷா, தர்சன், ராதேயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12 - 3 – 96) பி. ப. 2.00 மணியளவில் அல்வாய் வடக்கு அல்வாயில் நடைபெறும்.

தகவல்:
சு. முருகானந்தன்
(மகன்)

(41018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்திரிகாவின் கயிறு!

அதிகாரப் பரவலுக்காக அரசாங்கம் தயாரித்துள்ள சட்ட ஆவணம் குறித்துப் பேச்சு நடந்துவற்காக விடுதலைப் புலிகள் முன்வருவார்கள் என்று அரசு எதிர்பார்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

இந்த வருடத்தின் அகில உலக அரசியல் பகிடியும் வேடிக்கையுமாக இதனைக் கொள்ளலாம்!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக்காண வேண்டும் என்பதில் நேர்மையாக இருந்தால், இருந்திருந்தால்—

விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை ஒழுங்காக, சீராக நடத்தி, முழுக்க முழுக்க அரசியல் தீர்வை நாடியே செயற்பட்டிருந்தால் —

இன்றைய தடங்கல் நிலை, முட்டுக்கட்டை தோன்றியிருக்கமாட்டாது.

பேச்சுவார்த்தை முறிவதற்கு அரசாங்கத்தின் இராணுவ நலன் பேணிய அணுகுமுறையே காரணம். பேச்சுவார்த்தைமேசைக்குச் சென்ற அடுத்த தரப்பின் மீது நம்பிக்கையும், புரிந்துணர்வும் இல்லாமல் அரசுநடந்து கொண்டது.

அதன் பின்னர், இதுவரையான இடைக்காலத்தில் கூட விடுதலைப் புலிகள் முக்கியமானவர்கள், தேவையானவர்கள் என்ற அணுகுமுறையை அரசு கைக்கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம். அவர்களைப் பலவீனப் படுத்தி விடலாம் என்ற சிந்தனையுடனேயே அரசு செயற்பட்டு வருகிறது.

இரண்டுமே யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட, நடைமுறைச் சாத்தியமற்றவை என்பது தெரிந்தும், தாம் ஆட்சித் தலைவர் என்ற மமதையும் வக்கிரபுத்தியும் மேலோங்கி, சந்திரிகா என்னென்னவோ எல்லாம் உளறித் திரிகிறார்.

பல சந்தர்ப்பங்களில் தனது அரசியல் அனுபவம் இன்மையையும், முதிர்ச்சி இன்மையையும் வெளிப்படுத்துகிறார்

இப்போது திடீரென்று விடுதலைப் புலிகள் தம்முடன் பேச வருவார்கள் என்று எதிர்பார்ப்பதாக ஒரு ' கயிறு'' எறிந்து பார்க்கிறார்.

நேரத்துக்கு நேரம், தனது மனம்போன போக்கில் எதனையும் செய்து விடலாம் என்ற தோரணையில் சந்திரிகா நடந்து கொள்கிறார்.

இப்போது கூட விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான தனது நிபந்தனைகளைக் கைவிட்டு, பேச்சில் மனப்பூர்வமான விருப்பம் கொண்ட தொனியில் சந்திரிகா பேசவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தொடரும் என்று கூறிக்கொண்டே தனது எதிர்பார்ப்பையும் வெளியிட்டிருக்கிறார்!

முந்திய காலத்துத் தமிழ் அரசியல் தலைவர்களை விட, கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளைவிட, விடுதலைப் புலிகள் முற்றிலும் வித்தியாசமானவர்கள், அவர்களை ஏமாற்ற முடியாது என்பதனைப் சந்திரிகாவினால் பகுத்தறிய முடியவில்லை.

அத்தகைய ஒருவர் — அடுத்த தரப்பினரைச் சரியாக அறிந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத ஒருவர் — எவ்வாறு அவர்களுடன் பேச முடியும்?

அரசியலை வெறும் சிறு பிள்ளை விளையாட்டாக அவர் கருதுவது நாட்டையும் அவரையும் சீர்கெடுத்தும்.

# இரவில் தங்குவதற்காக டாக்டர்கள் காங்கேசன் செல்ல வேண்டியுள்ளது

## நகரில் பாதுகாப்பு இல்லை என்கிறது மருத்துவர் சங்கம்

கொழும்பு, மார்ச் 12

யாழ்ப்பாண நகரில் இருந்து காங்கேசன் துறைக்கோ அல்லது பலாலிச்கோ மாலையில் பயணம் செய்வது ஆபத்தானதாகவே உள்ளது. யாழ். நகரில் இரவில் தங்குவது பாதுகாப்பானது அல்ல.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வைத்திய சேவையை மேற்கொள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உதவவில்லை என்று ஜனாதிபதி சுமத்திய குற்றச்சாட்டுக்கு அவர் பதில் அளித்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

எமது சங்கத்தின் தலைவர் டாக்டர் ஆனந்த சமரசேகரா உட்பட 15க்கும் மேற்பட்ட டாக்டர்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்பியுள்ளனர்.

எங்கள் கணிப்பின்படி யாழ்ப்பாணத்தில் டாக்டர்கள் கடமையாற்றக்கூடிய நிலைமை காணப்படவில்லை. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை வழங்கக்கூடிய அறைக்கு பிற்பகல் 3-00 மணிக்குப் பிறகு பாதுகாப்பு இல்லை.

தங்குமிட வசதிக்காக நாம் காங்கேசன்துறைக்கோ அல்லது பாலாலிக்கோ தான் செல்ல வேண்டியுள்ளது

பகல் வேளைகளில் மாத்திரமே அங்கு சென்று திரும்பக் கூடியதாக உள்ளது மாலையானால் அப்பகுதிகளுக்கான பயணம் ஆபத்தானதாகவே உள்ளது.

ஆஸ்பத்திரியிலும் போதிய பாதுகாப்பு வசதி இல்லை. ஆஸ்பத்திரியின் உள்ளகக் கட்டமைப்பும் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டிஉளது.

சிகிச்சைகளுக்கான போதிய வசதி ஆஸ்பத்திரியில் இல்லை. தங்கி சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் வேறு ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டே சிகிச்சை பெறவேண்டியுள்ளது. சத்திர சிகிச்சைக்கும் போதிய வசதி இல்லை.

வசதிகள் சிறிதும் இல்லாத நிலையில் அவர்கள் அங்கு சென்று கடமையாற்றத் தயங்குகின்றனர் — என்றார்.

## பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள்

சாவகச்சேரி, மார்ச் 12

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களுக்கான பெப்ரவரி மாத வவுச்சர்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ஹபரண கப்பலில் எடுத்து வரப்பட்டன.

எனினும் இந்த ஓய்வூதியத்தில் பழைய நிலுவைகள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதிய வவுச்சர்களை தரம் பிரிக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டு இன்று தபாலில் அவை சேர்க்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-117)

## வலிகாமத்தை தாக்க 7,000 புலிகள் பயிற்சியாம்

வலிகாமம் மீது தாக்குதல் நடத்தி அதனை படையினரிடம் இருந்து மீட்பதற்கு ஏழாயிரம் புலிகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

அடுத்த இரு வாரங்களில் இத்தாக்குதல் நடத்தப்படும் என்றும்— இராணுவ புலனாய்வுத் தகவல்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ]

## நீங்காத நினைவுகளுடன் பிரான்ஸ் செல்லும் கத்ரின்

மந்திகை, மார்ச் 12

மந்திகை ஆதார வைத்திய சாலையில் கடந்த ஆறு மாத காலமாகத் தொடர்ந்து பணியாற்றிய தாதி செல்வி கத்ரின் முல்லர் நேற்றுத் தமது தாயகமான பிரான்ஸுக்குப் பயணமானார்.

பிரான்ஸ் வைத்தியக் குழுவின் இணைப்பாளராகவும் கடமையாற்றிய இவர் ஒரு டாக்டருக்கு நிகராக தமது கடமைகளைச் சேவை மனப்பாண்மையுடன் ஆற்றினார்.

தமது தன்னலம் கருதாத நீண்ட நேரப் பணியினால் நோயாளர்களினதும், ஊழியர்களினதும் அபிமானத்தைப் பெற்ற இவருக்கு மந்திகை ஆஸ்பத்திரியில் கடந்த சனிக்கிழமை பிரிவுபசாரம் வழங்கப்பட்டது.

அவ்வேளை செல்வி கத்ரின் தமிழ்ப் பெண் போல, காஞ்சிபுரம் சேலையும் ரவிக்கையும் அணிந்து, கனகாம்பரம் மாலை சூடி, பொட்டு வந்திருந்தார்.

தாம் இங்கு செய்த பணியை மறக்க முடியாது என்றும், இப்பகுதி மக்களின் கஷ்ட நிலையில் தொடர்ந்து பணியாற்ற முடியாமற் போனது குறித்து வருந்துவதாகவும், இங்குள்ள மக்களின் மன உணவுர்களைத் தான் புரிந்து கொண்டதாகவும் — அவர் தனது நன்றி உரையில் தெரிவித்தார்.

இங்கு பணியாற்றிய பெருமையைச் சுமந்து நீங்கா நினைவுடன் செல்வதாகவும் அவர் சொன்னார்.

செல்வி கத்ரின் முல்லர் நேற்று 'ஹபரண' கப்பலில் கொழும்பு பயணமாகிறார்.

இவரது இடத்திற்கு செல்வி ஆர்ணி வலிக்கன்ற் என்ற உத்தியோகத்தர் வந்துள்ளார். (அ·15-173)

## உலக மகளிர் தினத்தில் இப்படியும் நடந்தது!

மட்டக்களப்பு, மார்ச் 12

குடிசையில் தனித்திருந்த 45 வயதுப் பெண் ஒருவர் படையினரின் ''கெடுபிடி''க்கு உள்ளானாராம்.

இந்தச் சம்பவம் உலக மகளிர் தினமான 8 ஆம் திகதி வாழைச்சேனையில் உள்ள மயிலங்கரச்சி என்ற சிறு கிராமத்தில் இடம்பெற்றது.

இந்த விவகாரம் வாழைச்சேனைப் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவர்கள் ராணுவப் பொலிஸாருக்கு அறிவித்தனர். இராணுவப் பொலீஸார் விரைந்து வந்து அப்பெண்ணை வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

அந்தப் பெண் தற்போது மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அடையாள அணிவகுப்பு நடத்தப்படவுள்ளது என்றும்—

இரு படையினர் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும்— கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(இ)

## கர்ப்பிணிப் பெண்ணுக்கு பொலீஸார் பாதுகாப்பு

வவுனியா, மார்ச் 12

வவுனியா, பூவரசன் குளத்தில் மூன்று அப்பாவிப் பொது மக்கள் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தின் போது படுகாயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு ஆஸ்பத்திரியில் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பெண்ணின் கணவரும் இரு சகோதரர்களுமே படையினரால் வெட்டிக்கொல்லப்பட்டிருந்தனர்.

தமது கணவரையும் சகோதரர்களையும் இராணுவத்தினரே வெட்டிக் கொலை செய்தனர் என்று இந்த கர்ப்பிணிப் பெண்ணான புலேந்திரராஜா சிவயோகராணி தமது வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார்.

இறந்தவர்களின் இறுதிக் கிரியைகள் கடந்த புதன் கிழமை பூவரசன் குளத்தில் நடைபெற்ற போது பெரும் எண்ணிக்கையானோர் அதில் கலந்துகொண்டனர். (இ)

# ஸ்ரீலங்கா அரசை யுத்தத்துக்கு தூண்டும் மகா சங்கத்தின் போக்கு

## 'யுக்திய' ஆசிரிய தலையங்கம்

10-3-96 'யுக்திய' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் கீழே பிரசுரமாகி உள்ளது.

கடந்த 5ஆம் திகதி கொழும்பில் கூடிய மகா சங்கத்தினர் அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். ''முதலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், பேச்சுவார்த்தைகளை பின்னரே மேற்கொள்ள வேண்டும்'' என அந்தத் துறவிகள் நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் தெரிவித்துத்துள்ளனர்.

அந்தத் துறவிகள் மறந்து போன முக்கியமான பௌத்த வாக்கியம் ஒன்றுள்ளது. ''காரணமில்லாமல் காரியம் நடக்காது'' என்பதே அந்த வாக்கியமாகும்.

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்திற்குக் காரணம் என்ன? இந்தத் துன்பங்களையெல்லாம் அனுபவித்த வண்ணம் நீண்டகாலமாகத் தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடவேண்டிய தேவை தமிழ் சமூகத்துக்கு எதற்கு? தன்னைத்தானே அழிக்கும் கரும்புலிகள் உருவானதேன்? கடந்த 15ஆம் ஆண்டுகளாக போரினால் போருக்கு முடிவு காண முடியாமல் போனது ஏன்?

அந்தத் துறவிகளால் பதில் தர முடியாத இன்னும் பல வினாக்கள் உள்ளன. போரினாலேயே போருக்கு முடிவு காணுவேன் என்று கூறிய ஜனாதிபதி விஜேதுங்கா தேசிய சர்வதேச மட்டத்தில் தோல்வியைத் தழுவியது ஏன்? சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி விடுதலைப் புலிகள் போன்ற ஓர் அமைப்புடன் ஸ்ரீலங்கா அரசு போன்ற ஒரு அரசினால் போரிட முடியுமா? தற்போதைய அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத்திட்டத்தை வாபஸ்பெற்றால் சர்வதேசத்தின் கணிப்பு எவ்வாறு அமையும்?

இந்தியாவின் ஒத்துழைப்பின்றி விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியுமா? அர[illegible] [illegible] ஒரு அரசுக்கு இந்தியாவின் ஒத்துழைப்புத் தான் கிடைக்குமா?

தமிழ் மக்களின் ஒத்துழைப்பின்றி விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க முடியுமா? அரசியற் தீர்வு எவையுமின்றி தமிழ் மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமா?

தமிழ் மக்களின் ஒத்துழைப் பின்றி, இந்தியாவின் ஒத்துழைப்பின்றி, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் தொடுப்பதால் ஏற்படவுள்ள பலாபலன்களைப் பொறுப்பேற்க மகா சங்கத்தினர் தயாரா?

' ஆயுதமெடுத்தவன் ஆயுதத்தாலேயே அழிவான்'' இன்றைய உலகின் போக்கையும், தேசிய அரசியல் சக்திகளின் கருத்துக்களையும் கவனத்தில் எடுக்காமல் சிறிலங்கா அரசை, பேரழிவை ஏற்படுத்தும் யுத்தத்தில் ஈடுபடத்தூண்டும் மகா சங்கத்தினருக்கு நாங்கள் ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதற்குப் பதிலாக அதனை அணைப்பதற்கு வழி காட்டுங்கள்.

(இ-10)

## தொண்டாவின் காரின் மீது விழுந்த பந்து!

இளைஞர்கள் விளையாடிய பந்து அமைச்சர் தொண்டமானின் காரின் மீது விழுந்தது.

அமைச்சரின் காருக்குப் பாதுகாப்பாக வந்த கடற்படையினர் உடனடியாகச் செயற்பட்டு பந்து வீசிய இளைஞர்களைக் கைது செய்து இரத்தினபுரிப் பொலீஸில் ஒப்படைத்தனர்.

இதனைப் பின்னர் அறிந்து கொண்ட அமைச்சர் இரத்தினபுரிப் பொலீஸாருடன் தொடர்பு கொண்டு இளைஞர்களை விடுவித்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

அரசு சார்பற்ற நிறுவன (N. G. O) உயர் அதிகாரிக்கு சரசாலை, மட்டுவில், நுணாவில், கனகன் புளியடி ஆகியவற்றை அண்மித்த பகுதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை கணிசமான வாடகை தரப்படும். 20 - 03 - 1996 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

இல: 539,
C/o உதயன்,
சரசாலை தெற்கு.

(சி-4098)


## சிரித்திரன் சுந்தர் நினைவாக.....

வல்லைவெளி
"சுதர்சனம்" மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணிகள் தரும்

## நினைவுக் குறிப்பு

*மாமனிதர் சுந்தருடன் ஒரு பொழுதில்....*
*(சிந்தனை பிறக்கும் வகை)*

1960 களில் கொழும்பு நகரப் பகுதியின் தேநீர் கடையொன்றில் தேநீர் அருந்தக் காத்திருக்கின்றார், சுந்தர் அவர்கள். கடை வாயிலில் இருவருக்கிடையே நடந்த உரையாடல்: "ஏன் உந்த நாய் ஒன்றையும் சாப்பிடுகுது இல்லை." "அதுவோ அந்த நாயின்ரை சிநேகித நாயொன்று எப்பவும் அதோடையே திரிகிறது. நாலுநாளைக்கு முதல் டபிள்டெக்கர் மோதிச் செத்திட்டுது. அண்டையிலையிருந்து இந்த நாய் ஒன்றும் சாப்பிடுகிறதில்லை."

★ ★ ★ ★

சிந்தனை பிறந்தது. அடுத்த சிரித்திரனில்....

அது ஒரு செலவு வீடு. மனிதர் ஒருவர் இறந்து 8 ஆம் நாள். இரத்த பந்துக்கள் சூழ்ந்திருந்து களைத்து இளைத்து நல்ல வாய்க்குரிசையான இறைச்சியை பதம் பார்த்தவண்ணம் உள்ளனர். உண்டு முடித்து கை கழுவுவதற்காக அனைவரும் வெளியே வருகின்றனர். வயிறு ஒட்டி உலர்ந்து, தள்ளாடிய வண்ணம் நாயொன்று காணப்படுகிறது. வந்தவரில் ஒருவர், கையில் தண்ணீர் செம்போடு நின்ற மரித்தவரின் மகனைப் பார்த்து "யாற்றை நாய் தம்பி" என்று வினாவுகின்றார். "அது எங்கடைதான் மாமா..... அப்பா செத்த நாளையிலிருந்து ஒன்றும் சாப்பிடுகிறதும் இல்லை உப்பிடியே திரியுது" என்று பதில் சொல்கின்றான் மகன். கேட்டவரின் முகத்தில் வியர்வை துளிர்க்கின்றது — என்று ஒரு பகுதி வெளியாகின்றது.

இவ்வாறாக சுந்தர் அவர்களின் சிந்தனை பிறக்கும்.

— எஸ். சுபசீலன்

★ ★ ★ ★

அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

— இயற்கைநேசன்: மா. கனகராசா
திட்ட நிர்மாணி, தொழிலதிபர்
வல்லைவெளி சுதர்சனம்
மரம்வளர்ப்புத் திட்டம்,
இடியல் வெதுப்பகம்.

நெல்லியடி,
கரவெட்டி.

(சி/4103)

## ஏ ஆர். வி வரவில்லை

நேற்று வந்த ஹபரண கப்பலில் ஆஸ்பத்திரியின் பாவனைக்கான சில மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்பட்டபோதிலும் விசர் நாய்க் கடிக்கான தடுப்பு ஊசிமருந்து (ஏ.ஆர்.வி) எடுத்துவரப்படவில்லை.

## மனவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி திரு. சிவராஜ் பட்டீல் அரசுகளின் உள்துறைச் செயலாளர்கள் கரையோரக் காவல் படைத் தலைவர்கள் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## 14 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலையானோர் விவரம் வருமாறு:-

★ நடராசா ஸ்ரீதரன் (22 வயது) ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
★ பாலசிங்கம் முருகதாஸ் (22 வயது) அளவெட்டி கிழக்கு.
★ கனகசபை சிவகுமார் (27 வயது) ஆவரங்கால்.
★ கந்தையா பத்மநாதன் (36 வயது) அச்சுவேலி.
★ குமாரவேல் நடனபவனம் (35 வயது) அச்சுவேலி.
★ வடிவேல் வசீகரநாதன் (37 வயது) சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
★ கந்தையா மகேந்திரம் (30 வயது) வேலணை.
★ முத்து இராமேஸ்வரன் (24 வயது).
★ பாலையா பரமேஸ்வரன் (22 வயது) அரியாலை.
★ ஆறுமுகம் தியாகராசா (33 வயது) வழக்கம்பரை, சுழிபுரம்.
★ முருகன் சிவலிங்கம் (62 வயது) காங்கேசன்துறை.
★ மயில்வாகம் அசோகரட்ணம் (16 வயது) பருத்தித்துறை.
★ நாகமுத்து றஞ்சன் (28 வயது) ஈவினை.
★ கதிரமலை சிவனேஸ்வரன் (22 வயது) அரியாலை.

(இ-173)


### சந்திக்கவும்

நல்லூர் கோவிலடியில் தேநீர்க் கடை வைத்திருந்த ஈசன் என்னைச் சந்திக்கவும்.

பாலா மாஸ்டர்
ஸ்கூட்டர் மெக்கானிக்

(40991)


## வெல்லாவெளியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதிக்கு விடுதலைப் புலிகளைத் தேடித் தாக்குதல் நடத்தவென முன்னேறிச் சென்ற ஸ்ரீலங்கா இராணுவ கொமாண்டோ அணியையே விடுதலைப் புலிகள் தாக்கி கூண்டோடு அழித்து ஒழித்தனர்.

தொடர்ந்து மேலதிக துருப்புக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் வான் படை விமானங்கள் தாக்குதல்களை நடத்தி தேடுதல் நடத்துவதாகவும்—

சண்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததாகவும் ஆஸ்திரேலிய வானொலி நேற்று நள்ளிரவு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 23 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். என்றும் அந்த வானொலி தெரிவித்தது.

(அ-இ-3-6-7)

## உண்ணாவிரதம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

விஞ்ஞான செய்முறைகளை மேற்கொள்வதற்காக, ஆய்வுகூடத்துக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருள்களைப் பெற்றுத் தரும்படி கோரியே இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

(இ-7)

## பாடசாலைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு கணிசமான அளவாகவே இருந்தது. அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

எனினும் சில பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் இன்னும் தங்கி இருப்பதால் பாடசாலைகளை இயங்க வைப்பதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாக அந்தப்பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

மீசாலை, கொடிகாமம், கைதடி, நுணாவில் போன்ற இடங்களில் பாடசாலைகளிலிருந்த மக்கள் பெரும்பாலானும் வெளியேறி இருப்பதால் அந்தப் பகுதிப் பாடசாலைகளை இயக்குவதில் சிரமம் எதுவும் இருக்கவில்லை என்றும்—

சாவகச்சேரி நகரப் பகுதியிலும் மட்டுவில் பகுதியிலும் பாடசாலைகளில் இன்னும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கி இருப்பதால் பாடசாலைகளில் பெருமளவு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் — கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறையால் மாணவர்கள் தரையிலிருந்தே போதனைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் தரையில் அமர்ந்தே கல்வி கற்றனர்.

இதற்கு வசதியாக உரப்பைகள் போன்ற நில விரிப்புகளை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பாடசாலையின் அதிபர் சமூக சேவை அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-ரி-7-11-31-111-117-152)

## 6 பெண்கள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிராமத்து ஆண்கள் எழுந்து நடக்க முடியாத அளவுக்ள பலமாக தாக்கப்பட்ட பின்பே அவரவர் வீடுகளுக்குள் வைத்து இந்தப் பெண்கள் ஸ்ரீலங்கா படையினரால் மோசமான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 12 பேர் இதுவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரம் கிடைக்கவில்லை என்று புலிகளின் குரல் தெரிவித்தது. (இ—3)


"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு." (2 கொரி. 377)

## அழிவைத் தடுக்க அவசர ஜெபம்

# எஸ்தர் உபவாச ஜெப நாள்

### நாளை 13 ஆம் திகதி பங்குனி 1996

*பின்வரும் இடங்களில் நடைபெறும்:*

★ அப்போஸ்தல சபை; பொலிகண்டி, வல்வெட்டித்துறை
★ அசெம்பிளி ஒப் கோட்; சாரையடி, பருத்தித்துறை.
★ எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை; பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
★ சீயோன் தேவாலயம்; மதுவன் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை.
★ அசெம்பிளி ஒப் கோட்; உதவி அரசாங்க அதிபர் பணிமனை அருகே, கண்டி வீதி, சாவகச்சேரி.
★ எக்காளத் தொனி பூரண சுவிசேஷ சபை; நுணாவில் சந்தி, கண்டி வீதி, சாவகச்சேரி.

விசுவாசிகளே! உங்களுக்கு அண்மையிலுள்ள சபையொன்றில் தவறாது இணைந்து கொள்ளுங்கள்

காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

"நீ இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்......" (எஸ்தர், 4: 14 - 16)

ஜெப இணைப்பாளர்
EVANGELICAL ALLIANCE OF SRI LANKA
(40990)


## மரண அறிவித்தல்

இளவாலை

### வயிரவப்பிள்ளை கந்தையா

காடிவளை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் வசித்து தற்போது மிருசுவில் வடக்கு, மிருசுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வயிரவப்பிள்ளை கந்தையா அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், திருமதி அன்னலட்சுமி நாகலிங்கம், இராஜேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. நாகலிங்கம், திருமதி இ. செல்லமணி ஆகியோரின் மாமனாரும், வரதராசா (பிரான்ஸ்), அருந்தவராசா (ஜேர்மனி), விஜிதா (பிரான்ஸ்), யோகராசா (ஜேர்மனி), வனஜா, ஆதிரையன், இசைச்செல்வி, இளஞ்செல்வன், இளங்குயரன், திருச்செல்வி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-3-96) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் மிருசுவில் வடக்கிலுள்ள தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
க. இராசேந்திரம்
(மகன்)

தற்போதைய வதிவிடம்:
அருணாசலம் இல்லம்,
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(41019)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 12-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org